Register as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 23 வெள்ளிக்கிழமை (08 08 1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 245

## 5 படையினர் மன்னாரில் பலி!

### புலிகள் தாக்குதல்!!

கொழும்பு, ஒக. 8

மன்னாரில் புலிகள் நடத்திய தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர் ஐவர் காயம் அடைந்தனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நொச்சிக்குளத்தில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

புலிகள் மோட்டார்குண்டுகள் சிறிய ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தினர் என்றும் —

பாதுகாப்புப் படையினர் திருப்பிப் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும்—

இந்தமோதலில் 5 இராணுவத்தினர் உயிரிழந்தனர்; மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர் என்றும் — பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலசட்டம் 30 வாக்குகளால் நிறைவேறியது

கொழும்பு, ஒக. 8

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று 30 வாக்குகளால் சபையில் நிறைவேறியது.

பிரேரணையை ஆதரித்து 107 வாக்குகளும், எதிர்த்து 77 வாக்குகளும் கிடைத்தன.

இ. தொ. கா. யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு பிரேரணையை ஆதரித்து வாக்களித்தன.

ஐ.தே.க. நிகால் கலபதி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன எதிர்த்து வாக்களித்தன.

புளொட் உறுப்பினர் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை.

(இ-3)

## புளியங்குளத்துக்கு தெற்கே 2 படையணிகளும் இணைவு!

### மோதலில் ஒரு படை வீரர் பலி 17 பேர் காயம்

கொழும்பு, ஒக. 8

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 55 ஆவது படையணியும் 53 ஆவது படையணியும் புளியங்குளத்துக்குத் தெற்கே 2 கிலோ மீற்றர் தூரத்திலேயே இணைந்துள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

தாண்டிக்குளத்தில் இருந்து நகர்ந்து ஓமந்தைக்கும் புளியங்குளத்துக்கும் இடையில் தரித்து நின்ற 55 ஆவது படையணியும் மணலாறில் இருந்து நகர்ந்து நெடுங்கேணியில் தரித்தும் நின்ற 53 ஆவது படையணியுமே தற்பொழுது இணைந்து கொண்டுள்ளன.

இருபடையணிகளும் புளியங்குளம் வரை நகர்ந்து புளியங்குளத்திலேயே இணைவது என்று முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

அடுத்தடுத்து இடம்பெற்ற புலிகளின் தாக்குதல்கள் காரணமாக இத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டு புளியங்குளத்துக்கு தெற்கே இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் தற்பொழுது படைகள் இணைந்து கொண்டிருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் இரு படையணிகளும் இணைந்த போது புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் —

அத்தாக்குதலில் ஒரு படை வீரர் உயிரிழந்தார் என்றும் 17 படையினர் காயமடைந்தனர் என்றும் —

புலிகள் தரப்பில் நால்வர் உயி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சு நடத்த எம்.பிக்கள் பலர் வற்புறுத்து

## 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம் குறித்தும் பிரஸ்தாபம்

கொழும்பு, ஒகஸ்ட் 8

தற்பொழுதுநடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்தப்பட வேண்டும் என்றும் இதன் மூலமே நாட்டில் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்தலாம என்றும் நேற்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய அரசாங்க-எதிர்த் தரப்பு எம். பிக்கள் பலரும் வற்புறுத்தினர்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் விவாதத்திலேயே இது குறித்து எம். பிக்கள் பலராலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க] பேசுகையில் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சி தரைப்பாதையை திறக்கும் முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப இணைப்புக்கு குறுக்கு வழி கண்டிருக்கினம் எண்டு சொல்லுங்கோ...!

## தப்பிஓடிய படையினரில் 100 பேர் கைது

கொழும்பு, ஒக. 8

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் மீண்டும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படை நடவடிக்கை தொடரும் என்கிறார் அனுருத்த ரத்வத்த

கொழும்பு, ஒக. 8

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை அதன் குறிக்கோளை அடையும் வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இப்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை ஒருமாதகாலத்துக்கு நீடிக்கும் பிரேரணை விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கொழும்பு நகரில் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு அடிக்கடி தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

''விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு என அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

''சிம்பாப்வே அரசின் கப்பல் ஒன்றுபற்றி பிரஸ்தாபிக்கப் பட்டது. அந்தக்கப்பல் விவகாரத்துடன் எமது அரசுக்கு எதுவித தொடர்பும் கிடையாது. எமக்குத் தேவையான யுத்த உபகரணங்கள் சிம்பாப்வேயின் இருந்து பத்திரமாக இங்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டு விட்டன.

'வெற்றி உறுதி நடவடிக்கையில் வெற்றி பெற்று கிளிநொச்சி வரையான தரைப்பாதையை திறப்போம்.'' இப்படி அவர்மேலும் கூறினார்.

(இ-3]

## நெடுங்கேணி -- புளியங்குளம் வீதியில் நேற்று மோதல்

### படையினர் - 6, புலிகள் - 9 மரணம்

வவுனியா, ஒக. 8

நெடுங்கேணி — புளியங்குளம் வீதியில் நகர்ந்து சென்ற படையினர் மீது நேற்றுக் காலை 5-50மணிக்கு புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்று ''புலிகளின் குரல்'' வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

இந்த தாக்குதலில் 6 படையினர் உயிரிழந்ததாகவும் —

பல படையினர் காயம் அடைந்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

தமது தரப்பில் 9 புலிகள் களப்பலியானதாகவும்-ரி 56, ரி 81, எல். எம். ஜி. ஆயுதங்கள் மற்றும் ஏராளமான ரவைகள் ஆகியவற்றைப் படையினரிடமிருந்து கைப்பற்றியதாகவும்— ''புலிகளின் குரல்'' வானொலி மேலும் தெரிவித்தது.

(இ-3-164)

## சீனாவிலிருந்து நவீன ஆயுதங்கள் கொழும்புத் துறைமுகம் வந்தன!

### 100க்கும் மேற்பட்ட டிரக்குகளில் போர்முனைக்கு விரைவு

கொழும்பு, ஒக. 8

சீனாவில் இருந்து கப்பலில் நவீன ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டு கொழும்புத்துறை முகத்தில் இறக்கப்பட்டுள்ளன.

'யங் ஷியா' என்ற இந்தக் கப்பல் கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்தது.

இந்த ஆயுதங்களை இறக்கி முடிக்க இரு நாள்கள் சென்றன என்றும் —

நூற்றுக்கும்மேற்பட்ட கனரக டிரக் வண்டிகளில் இந்த ஆயுதங்கள் நேற்று முடிய நிலையில் எடுத்துச் செல்லப்பட்டன என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினரின் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்காகவே இந்த ஆயுதங்கள் அவசரமாக எடுத்துவரப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(இ)

## நல்லூர்க் கந்தன் வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பம்

### தெற்கு வாசல் நேற்று திறக்கப்பட்டது

நல்லூர், ஒக. 8

பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 25 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

உற்சவம் அமைதியாகவும், பக்தி பூர்வமாகவும் நடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வட்டம்

## கருத்தரங்கத் தொடர்

"விளம்பர அழகியல்"
வி. பி. சிவநாதன்
(தலைவர், பொருளியல்துறை)

இடம்- முகாமைத்துவ மண்டபம்
காலம்- 08 - 08 - 97
நேரம்- பி. ப. 2. 30

கலைப்பீடம்
யா/பல்கலைக்கழகம்

அன்பளிப்பு!
சானுகா நகை மாடம்
198 H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (48880)


# சகல குழந்தைகளுக்கும் மீண்டும் போலியோ மருந்து

யாழ்ப்பாணம், ஓக. 8
இளம்பிள்ளைவாத நோயை (போலியோ) முற்றாக ஒழிக்கும் நோக்குடன் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு மீண்டும் போலியோத் தடுப்புச் சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதியும், ஒக்ரோபர் 11 ஆம் திகதியுமாக இரு நாள்கள் சகல குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்தை வழங்கும் பணியை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த புதனன்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பதில் பணிப்பாளர் டாக்டர் கே. ரி சிவபாதம் தலைமையில் நடைபெற்றது. சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்படப் பலர் அதில் கலந்து கொண்டனர்.

சர்வதேச றோட்டறிக் கழகத்தின் ஆதரவுடன் உலக சுகாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் முன்பு நடைமுறைப் படுத்தப்பட்ட போலியோ ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 90 சதவீதமான குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டிருக்கின்றது. இம்முறை 100 சதவீதமான குழந்தைகளுக்கு சொட்டு மருந்தை வழங்கும் இலக்கை எட்டும் நோக்கில் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

இதேவேளை — போலியோ சொட்டு மருந்தைப் பாதுகாப்பாகப் பேணுவதற்கும், இடத்துக்கிடம் எடுத்துச் சென்று விநியோகிப்பதற்கும் அவசியமான குளிர்சாதன உபகரணங்கள், மற்றும் தேவையான மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பதில் மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம் கொழும்பு சென்றுள்ளார்.


எமது
புதியவெளியீடுகள்!
போலிஸ் ஸ்டோரி புகழ்
சாய்குமாரின்
தைரியம்
ஜுராசிக் பாக்
(2 ஆவது தொடர்ச்சி)
அடுத்த வெளியீடு!
சத்தியராஜின்
'பகைவன்'
விடியோ விமல்
யாழ்ப்பாணம். (48881)


# திருமறைக் கலா மன்றம்

நடத்தும்

## 'நினைவு விழா'

மறைந்த யாழ். ஆயர்
மேதகு ஜே. எமிலியானுஸ்பிள்ளை
மறைந்த புலவர்
எஸ். ஜே. தம்பிமுத்து
இவர்களின் நினைவாக
சனி 9-8-97 — ஞாயிறு 10-8-97
தினமும் மாலை 4. 30 மணி
நினைவுப் பேருரை

சிறப்பு நிகழ்ச்சியாக:-
"இசை விருதூது" (இசை நிகழ்ச்சி)
"ஜெனோவா" (கூத்து - இசை)
இடம்பெறும்.
பிரவேசம்: இலவசம் மன்ற அரங்கு

- திருமறைக்கலாமன்றம்

(சி/1279)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## முதுதத்துவமாணி தகுதிகாண் தேர்வு - 1995 கலைப்பீடம்

முதுதத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களின் பட்டப்படிப்பின் சாதாரண சித்தி அடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்து நாகரிகம், வரலாறு, தமிழ், மெய்யியல், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மொழியியல், நுண்கலை, வர்த்தகம், நாடகமும் அரங்கியலும், முகாமைத்துவம், அரசறிவியல், சமூகவியல்.

விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றித் தபால் மூலமாகவோ கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் 25-08-1997ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 10/- இற்கான காசுக் கட்டளையை அல்லது தபாற்கட்டளையுடன் முத்திரை ஒட்டி, சுய விலாசம் இடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 25-08-1997 இற்கு முன்பாகக் கலைப்பீடாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இத்திகதிக்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.
07-08-1997
(சி/1278)

# இந்துகுருமார் ஒன்றியம்

## விஷேட அறிவித்தல்

இந்து குருமார்களுக்குரிய விஷேட அடையாள அட்டைக்கான கலர் போட்டோ எடுக்கத் தவறியவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை 09-08-97 யாழ். கதிரேசன் கோயில் மண்டபத்தில் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை படம் எடுத்துக் கொள்ளலாம். எனவே எடுக்க தவறிய சகல இடங்களையும் சேர்ந்த அந்தணர்களை தவறாது குறித்த நேரத்தில் வந்து தங்கள் படத்தை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

செயலாளர்,
இந்து குருமார் ஒன்றியம்.
(48882)


# யூப்பிட்டர் கல்வி நிறுவனம்

சங்கத்தானை சாவகச்சேரி

## G. C. E. (O/L) - 1997

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆரம்பம் :- 09 - 08 - 1997
கணிதம்- சனி, ஞாயிறு முற்பகல் 7 மணி (நியம நேரம்)
விஞ்ஞானம்- சனி, ஞாயிறு முற்பகல் 8 மணி (நியம நேரம்)
ஆண்டுகள் - 4,5,6,7,8,9,10,11,12 (கணிதம்)
ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

- நிர்வாகி

(சி/1280)



# புலமைப் பரிசில் '97

06-08-97 எமது நிறுவனத்தில் நடந்த விசேட பரீட்சையில்

1. யோகசுந்தரம் டினேஸ் — 183 புள்ளி
   யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
2. தியாகராஜா சுகந்தன் — 181 புள்ளி
   சென். ஜோண் பொஸ்கோ
3. மதுராந்தகா செல்வரட்ணம் — 175 புள்ளி
   சரவணபவானந்தா — கோப்பாய்

இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்
BOND INSTITUTES
யாழ்ப்பாணம். (48877)



# ராகவன் கல்வி நிலையம்

பலாலி வீதி, உரும்பிராய்.
10 வருடங்கள் உள்ளடக்கிய
விஞ்ஞான வினா விடை
வகுப்புக்கள் ஆரம்பம் (Paper Class)
திங்கள் 3 00 மணி
ஆசிரியர்
திரு. குணசீலன்
(48873)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 04 — 04 — 1948
இறப்பு: 08 — 08 — 1995

## திரு. வைத்திலிங்கம் ஜெயரட்ணம்

''கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள்
இன்றுமுதல் பாக்கியவான்கள்''
வெளி. 14:13

துயருறும்:
அம்மா மற்றும் குடும்பத்தினர்

"ஞானவாசா"
ஏழாலை தெற்கு,
ஏழாலை. (47365)

# தொண்டர் ஆசிரியர் சங்கம்

யாழ். மாவட்டம்.

## விசேட அறிவித்தல்

தங்கள் பெயர் பட்டியலில் உறுதிப்படுத்தும் வகையில் 11-ம், 12-ம், 13-ம் - 08-97 திகதிகளில் எமது சங்க அலுவலகத்திற்கு (காலை 8 மணி -2 மணி வரை) வருகை தரவும். மேற்குறிப்பிட்ட திகதிகளில் வருகை தராதோரின் விவரம் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முகவரி:- திருமதி நீ. தர்மகுலசிங்கம்
145/5, நாவலர் றோட்,
(மனோகரா தியேட்டர் பின்புறம்)
யாழ்ப்பாணம்.

(C/1281) செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரத்து 281 அ. அட்டைகள் யாழ். செயலகத்துக்கு வந்துள்ளன

நவாலி, ஒக. 8

யாழ்: மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்த 5 ஆயிரத்து 281 பேரின் அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தில் உள்ள ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

கடந்த 96ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் விண்ணப்பம் செய்தவர்களினதும், யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகள் மூலம் விண்ணப்பம் செய்த மாணவ மாணவிகளினதும் அடையாள அட்டைகளும் இவற்றில் அடங்கும்.

பாடசாலை அதிபர்கள் தமக்குரிய அ. அட்டைகளை நேரில் வந்துபெற்றுச் செல்லுமாறும், ஏனையவர்களின் அடையாள அட்டைகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-100)


யா | ஆவரங்கால்

நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கம் புனரமைத்தல்

தலைவர்: திரு. சு. முத்துக்குமாரசுவாமி
இடம்: பாடசாலை மண்டபம்.
காலம்: 10 - 08 - 97 பி. ப. 3 மணி.

பழைய மாணவர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றேன்.

- அதிபர்

(48866)



உ

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

கொக்குவில்

கணக்குப் பரிசோதித்தல்

மேற்படி ஆலயத்தின் 1996/97 நிதிவருடத்திற்கான (01-08-96 தொடக்கம் 31-07-97 வரை) வரவு செலவு அறிக்கையை பரிசோதிப்பதற்கு கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்களை ஆலய பொருளாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 10-08-97 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

- செயலாளர்

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில். (48858)


## மூன்றாம் ஆண்டு நினைவுதினம்



திருமதி பாக்கியம் செல்லத்துரை

தோற்றம்: 03–04–1923 மறைவு: 11–08 1994

ஆண்டு மூன்று ஆனதம்மா!
ஆறவில்லை எம்துயரம்.
ஆயிரம் தெய்வங்கள் இப்புவியில் வந்தாலும்!
எமக்கு எம் அம்மா போல் வருமா?

பாசமுடன் நினைவு கூரும்,
மக்கள், மருமக்கள்.

"அன்னைநிழல்"
அராலி வடக்கு,
செட்டியாமடம்,
வட்டுக்கோட்டை. (இ/1277)

## அச்சுவேலியில் மண்எண்ணெய் விநியோகம்

அச்சுவேலி, ஒக. 8

வலி கிழக்கு வடபகுதி அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் வீதம் மண்எண்ணெய் வழங்கி வருகின்றது.

மண்எண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட பின்பு 2 லீற்றர் வீதம் மூன்று தடவைகள் பாவனைக்கு மண்எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-11)

## சிறுவர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக. 8

மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்கப் பாலர் பாடசாலையும் மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கப் பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா மானிப்பாய் பட்டின சங்கப்பாலர் பாடசாலை மைதானத்தில் நாளை சனிக்கிழமை காலை2 30 மணிக்கு வி. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். விழாவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டி. குணராஜசிங்கம் பிரதம விருந்தினராகவும், மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் கோ. மகாலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-5)

## தடைகள் தளர்வு

ரெல் அவிவ், ஒகஸ்ட் 8

ஜெருஸலேம் நகர குண்டு வெடிப்புகளை அடுத்து மேற்குக் கரையிலும் காஸாவிலும் பலஸ்தீனியர்களுக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகள் சிலவற்றை இஸ்ரேல் தளர்த்தியுள்ளது.

இந்த இரண்டு வட்டாரங்களிலும் உள்ள யூதக் குடியேற்றங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலைக்குச் செல்வதற்கு பலஸ்தீனியர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று இராணுவம் அறிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேலுக்குள் பாலஸ்தீனர்கள் நுழைவதற்கு எதிராகவுள்ள தடை தொடர்ந்து நடைமுறையிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)


வணிக, கலை
முதற்தேர்வு - வெளிவாரி' 98
★ வர்த்தகம்
★ முகாமைத்துவம்
திரு. பசில்
★ பொருளியல்
திரு. இராஜேஸ்வரன்
SHAMROCK
யா ஈச்சமோட்டை வீதி,


## கைதாகித் தகவல் தெரியாத மூவரின் விவரங்கள் கிடைத்தன

யாழ்ப்பாணம், ஒக. 8

கைதாகிய பின்னர் தகவல் தெரியாதோர் பட்டியலில் இடம்பெற்றிருந்த மூவர் பற்றிய விவரங்கள் 51 ஆவது படையணிப் பிரிவினரால் வடபகுதி கைதானோர் பாதுகாவலர் சங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ குமாரசாமி சந்திரகுமார் — கோணாமலை, கொக்குவில். (இவர் 26-04-97 காங்கேசன்துறை பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்)

★ மகேந்திரன் ரவீந்திரன் — சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (இவர் 03-04-97 இல் காங்கேசன்துறை பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்)

★ சிங்காரவேல் யோகேந்திரம் — ஆனைக்கோட்டை. (இவர் 28-03-97 இல் காங்கேசன்துறை பொலீஸில் ஒப்படைக்கப்பட்டார். )ஐ)

## பெனடிக்ற்பாலன் அஞ்சலி கூட்டம்

திருநெல்வேலி, ஒக. 8

அண்மையில் காலமான எழுத்தாளர் யோ. பெனடிக்ற் பாலனின் அஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் யாழ். வலயம் 1 பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராஜா உட்படப் பலர் அஞ்சலி உரையாற்றுவர். (ஐ 135)

## முன்னோடி பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக. 8

யாழ்ப்பாணம் கிரிக்கெற் மத்தியஸ்தர் சங்கத்துக்கு புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சை முன்னோடி வகுப்புக்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறுகின்றன. பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிக்கு இந்த வகுப்புக்கள் நடைபெறுவதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## பெரும்போக நெற் செய்கைக்கு யூரியா உரம் வழங்கப்படும்

காங்கேசன்துறைக்கு கப்பலில், எடுத்துவரப்பட்ட ஒரு தொகுதி யூரியா உரம் பெரும்போக நெற்செய்கைக்கு வழங்கப்படவுள்ளது;

இக்கப்பலில் சுமார் 500 மெற்றிக்தொன் உரம்எடுத்து வரப்பட்டுள்ளது.

சமநல சேவை நிலையத்தினூடாக, விவசாய சம்மேளனங்களின் பட்டியலின் படி இந்த உரம் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## ஐ. நா. அமைதிப்படையின் ஹெலி லெபனானில் வீழ்ந்து நொறுங்கியது

### பணியாளர்கள் ஐவர் மரணம்

தெற்கு லெபனானில் ஐக்கிய நாட்டு அமைதிப் படையின் ஹெலிக்கொப்ரர் ஒன்று விழுந்து நொறுங்கியதில் அதில் பயணஞ் செய்த 5 அமைதிப் பணியாளர்கள் உயிரிழந்தனர்.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் தன்னிச்சையாக ஏற்படுத்தியுள்ள பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் அந்த ஹெலிக்கொப்ரர் விழுந்தது.

இந்த விபத்துக்கான காரணம் என்னவென்பது உடனடியாகத் தெரியவரவில்லை என்று ஐ. நா. அமைதிப் படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-5)

## இஸ்ரேல் நிலைகள் மீது 'ஹிஸ்புல்லா' ஷெல்வீச்சு

தெற்கு லெபனானில் இயங்கும் 'ஹிஸ்புல்லா' தீவிரவாதிகள் வடக்கு இஸ்ரேல் பகுதி மீது எறிகணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த எறிகணைகளில் சில தெற்கு லெபனானில் இஸ்ரேல் ஏற்படுத்தியுள்ள பாதுகாப்பு வலயத்துக்குள் விழுந்தன என்றும்—

வடக்கு இஸ்ரேலின் லஹாரியா பிரதேசத்தையும் அவை தாக்கின என்றும் - தெரிவிக்கப்பட்டது,

இத்தாக்குதலை ஈரான் ஆதரவு 'ஹிஸ்புல்லா' இயக்கமே நடத்தியது என்று அதன் பேச்சாளர் ஒருவர் உரிமைகோரியுள்ளார்.

தெற்கு லெபனானில் இஸ்ரேலியப் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள பகுதிகளை இலக்கு வைத்தே எறிகணைகள் ஏவப்பட்டன என்று அந்தப் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ-5)

## இந்தோனேசியாவில் கடும் வரட்சி செயற்கை மழை பொழிய திட்டம்

ஜகார்த்தா, ஒக. 8

இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள பருவகால வரட்சியை அடுத்து விவசாய நடவடிக்கைகள் பெரும் பாதிப்படைந்துள்ளன. எனவே விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு செயற்கை மழையைப் பொழிவிக்க இந்தோனேசிய அரசு திட்டமிட்டுள்ளது.

நெற் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்படும் யாவா, தென் சுலாவேசி ஆகிய பகுதிகளிலேயே கடும் வரட்சி ஏற்பட்டிருக்கிறது. இப் பகுதிகளில் செயற்கை மழையை பொழிவிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாக பொது வேலைகள் அமைச்சர் ரெடினல் மூச்டர் தெரிவித்தார்.

அடுத்த மழைப்பருவத்தின் போது அணைக் கட்டுகளை அமைத்து நீரைச் சேமித்து வைக்கத் திட்டமிடப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். )ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ







நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி கோயில்

# மஹாகும்பாபிஷேக மண்டல மஞ்சன பூர்த்தி தின பஞ்சகுண்டபக்ஷ நவோத்திர சகஸ்ர மஹா சங்காபிஷேக விழாச் சிறப்பு மலர்

அந்திரான் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எங்கள் குல தெய்வமாகிய முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 25-06-97 இல் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 44நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று 45ஆம்நாளாகிய இன்று(08-08 97) 1008 சங்காபிஷேகம் நிகழத் திருவருள் கூடியுள்ளது.

சுமார் 165 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த புதுமை வாய்ந்த முருகப் பெருமானின் அற்புதங்கள் யாவற்றையும் எமது மக்கள் அறியாதவர்கள் அல்லர். எவ்வகையான காரியங்களாயினும் நிறைவேற்றித் தருமாறு அவனிடத்திலேயே அடியார்கள் பொறுப்பித்து விடுகிறார்கள். அவனருளால் அவர்கள் நினைத்த காரியத்தை வெற்றி கொண்டும் விடுகிறார்கள். எங்கள் குல தெய்வமே! என்றும் எம்மை எப்பொழுதும் காத்திடுவீர்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''

பிரதமகுரு: சிவாச்சாரியமணி சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக் குருக்கள், தேவஸ்தான பிரதமகுரு: சர்வபோதகம், சிவாகமஞானபாஸ்கரன்,

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
(காயத்திரிபீடம் -இணுவில்)

உங்கள் இல்லங்களில் நடைபெறும் நிகழ்வுகளை வீடியோ கலர் கறுப்பு வெள்ளை படம் எடுக்க நீங்கள் நாடுமிடம்:

**செல்வன் படப்பிடிப்பாளர்**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

உங்கள் வீடுகளில் இடம்பெறும் மங்களகரமான வைபவங்களுக்கு நாடுமிடம்:

**K. G. M. போட்டோ**
அரசடி வீதி, நவாலி.

சகலவிதமான பலசரக்குப் பொருள்களையும், ஆடம்பரப் பொருள்களையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள:

**கமலா ஸ்ரோர்ஸ்**
நவாலிவீதி, ஆனைக்கோட்டை.

(சி/1273)

சகலவிதமானபுடைவைவகைகள், அழகுசாதனப் பொருள்கள், பரிசுப்பொருள்கள், பாதணிகள் ஆகிய அனைத்தையும் சகாய விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

**சந்திரன் பான்சி பலஸ்**
நவாலிவீதி, ஆனைக்கோட்டை.

**SHARUJAN FANCY**
**சாருஜன் பான்சி**
மொத்த விற்பனையாளர்:
யாழ்நகரில்:
எவர்சில்வர், அழகு சாதனப்பொருள்கள் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடும் ஒரே இடம்:
சாருஜன் பான்சி
51, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

சுத்தமான தரம்மிக்க V. S. P. நல்லெண்ணெய்க்கு நாட வேண்டிய இடம்:

**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26 A, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

**கௌரி பான்சி ஹவுஸ்**
சிவன் கோயில் அருகாமை,
இல. 316, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

அழகு சாதனப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.
அலுமினியப் பாத்திர பிளாஸ்ரிக் வகைகள் எவர்சில்வர் பாத்திரங்கள், லேஸ் வகைகள், பட்டன் வகைகள், நூல் வகைகள், விளையாட்டுப் பொருள்கள், அல்பம், இமிட்டேசன் பிளாஸ்ரிக் காப்பு, பிளாஸ்ரிக் அலுமேனியம், எவர்சில்வர்.

(மலரமைப்பு: பொ. பொன்னுத்துரை)

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் தெற்கு இறை ''ஒட்டு வெளி வளவு'' நிலப்பரப்பு (30) முப்பது. எல்லை: கிழக்கு கிரவல் தெரு, வடக்கு புகையிரதப்பாதை, மேற்கு கந்தையா தங்கராசாவுக்குரிய ஆதனம். தெற்குப் பாகம் கார்த்திகேசு நல்லதம்பியும் பெண் இராசமணியும் எமக்கு அறுதியாக விற்ற ஆதனமும் அமிர்தலிங்கம் துரைசிங்கத்துக்குமுரிய ஆதனமும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
வண. பிதா ஜெபமோகன் ஜெபரத்தினம்,
மே. பா. திரு. R. யோசேப்,
கிளாலி வீதி, எழுதுமட்டுவாள்.

(48861)

## 26 ஆவது வருடாந்த விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ். பாலர் கல்விக் கழகம் நிர்வகிக்கும் 12 பாலர் பாடசாலைகளுக்கிடையிலான 26 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் யாழ். மாநகர சபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் பிரதமவிருந்தினராகவும், யாழ். செயலக பிரதம கணக்காளர் சு. சிவபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(ஐ-5)

## விற்பனைக்கு

கர்F போம் பிறசியர்ஸ், சில்வர் சீல்ட் தயாரிப்புகள், சொக்ஸ் வகைகள், பெனியன், லேடிஸ் வெஸ்ட், போட்டோ அல்பம் இன்னும்பல மலிவு விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

**ஸ்ரீமுருகன்**
303, கே. கே. எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(48852)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய விஞ்ஞான ஆசிரியை
திருமதி இ. சிவகாமியம்மா அவர்களின்
கணவரான
**பெ. இராமச்சந்திரன்**

அவர்கள் 6-8-97 இல் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம் அன்னாரின். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ப. அ. சங்கம்.
யாழ்.கோப்பாய்
நாவலர் வித்தியாலயம்,
கோப்பாய்.

(48857)

## பாலர் ஆசிரியராக...

பயிற்சிக்கு
க.பொ.த(சா/த)தகைமையும்,
மேல் தகைமையுடையோரும்
தபால் வழியில்
ஆறுமாதத்தில் பயிலலாம்.
எழுதுக:
**பாலர் ஆசிரியர் சங்கம்**
20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(47356)

## பொது உளச்சார்பு

**(GENERAL APTITUDE)**

**A/L 99**

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான
மாணவர்களுக்கு
சகல பிரிவினருக்கும்

ஆரம்பம்: 09-08-97 ஞாயிறு காலை 9-00 மணி

ஆசிரியர்: திரு. தவசேகர்

பிரிவு 1 இக்கு அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்;

**COLLEGE OF COMMERCE**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(48838)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயில்வாகனம் சுவாமிகளின் 12 ஆவது குருபூசைத் தினம்

## (09 - 08 - 1997 = சனிக்கிழமை)

ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனின் சிறப்பை அவன் அள்ளி வழங்கும் அருளை அளவிட்டுக் கூறுதல் எளிதான காரியம் அல்ல. ஆத்மீக ஈடேற்றத்திற்காக மட்டுமன்றி உலகியலில் ஏற்படுகின்ற பல்வேறு வகையான துன்பங்கள், மனச்சுமைகளிலிருந்து விடுபடுவதற்காகவும் பல்வேறு இடங்களிலிருந்து அடியார்கள் இவ்வாலயத்தை தரிசிக்க வருவது இவ்வாலயத்தின் சிறப்பு அம்சம்.

தாங்க முடியாத, சுமக்க முடியாத பல்வேறு வகையான துன்பங்களால் விரக்தியடைந்து வாழ்க்கையின் விளிம்பிற்கே சென்றுள்ள மக்கள் கூட்டத்தினரே இன்று இந்த மண்ணில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறானவர்களில் பலர் பக்தியுடனும் அசையாத நம்பிக்கையுடனும் கலியுக வரதன் அமர்ந்திருக்கும் இவ்வாலயத்திற்கு வந்து வழிபட்டு தங்கள் துன்பங்கள் நீங்கி பயனடைகின்ற அற்புதச் செயற்பாட்டை இன்னும் இங்கே காணமுடிகின்றது. இத்தகைய சிறப்பு மிக்க இந்த ஆலயத்தைத் தரிசிக்க வருகின்ற அடியார்களுக்கு அடியானாக வாழ்ந்து அவர்களுக்கு அன்னதானத் தொண்டு செய்து முருகன் திருப்பாதங்களைச் சென்றடைந்த சுவாமிகளே மயில்வாகன சுவாமிகளாவார். அவருடைய 12 ஆவதுகுரு பூசைத்தினம் 09-08-97 இல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் நடைபெறவுள்ளது.

1913 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 26 ஆம் நாள் ஆனைப்பந்தி என்னும் ஊரில் மயில்வாகன சுவாமிகள் பிறந்தார்கள். இளம் வயதிலேயே ஆத்மீக ஈடுபாடுள்ளவராக விளங்கிய சுவாமிகள் தென்னிந்தியா சென்று பல தலங்களையும் வழிபட்டதுடன் ரமண மகரிஷியின் சிஷ்யனாகவும் சிலகாலம் வாழ்ந்தார்கள். இலங்கைக்குத் திரும்பிய சுவாமிகள் சந்நிதி முருகன்பால் பக்தி கொண்டு ஆலயச் சூழலில் தங்கி முருகனின் புகழைப் பாடி வாழ்ந்து வந்தார்கள். இக்காலத்தில் தான் 1940 ஆம் ஆண்டு "ஆனந்தாச்சிரமம்" என்ற பெயரில் ஒரு மடத்தை ஆரம்பித்து அடியார்களுக்கு அன்னம் வழங்கும் தொண்டை ஆரம்பித்தார்கள். சுவாமிகள் ஆரம்பித்த தொண்டு தூய்மையானதாகவும் முருகன் அடியார்கள் பசியாற வேண்டும் என்ற நோக்கத்தையும் கொண்டிருந்ததால் இந்த ஆச்சிரமம் முருகன் அருளால் எந்தக் குறையுமின்றி சிறப்பாக தனது பணியை ஆற்றி வந்தது. காலப்போக்கில் ஆத்மீக ஈடேற்றத்திற்காக சந்நிதிக்கு வருகின்ற அடியார்கள் பலர் தங்கியிருக்கக் கூடிய வசதிகளையும் சுவாமிகள் ஆச்சிரமத்தில் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

### அன்னதான த்தொண்டின் சிறப்பம்சங்கள்

நூற்றுக்கணக்கான அடியார்களை ஒரே நேரத்தில் அமர்த்தி, உணவு பரிமாறுதல், வாழையிலையில் சாதம் இட்ட பின் எல்லோரும் சேர்ந்து கூட்டமாக முருகன் புகழைப் பாடிய பின் சாதத்தை உட்கொள்ளுதல், நேர்த்தியாகவும், சுத்தமாகவும் தொண்டர்கள் மூலம் அடியார்களுக்கு உணவு பரிமாறுதல் போன்றவை மயில்வாகன சுவாமிகளின் அன்னதானத் தொண்டின் சில சிறப்பம்சங்களாகும். திருவிழாக் காலங்களில் அன்னதானம் வழங்கப்படுவதை வெளிப்படுத்த அன்னச் சின்னம் பொறிக்கப்பட்ட வெள்ளைக் கொடியை ஆச்சிரமத்தில் பறக்க விட்டு மடத்துக்கு வருகின்ற அடியார்களை கருணை உள்ளத்துடன் உபசரிக்கின்ற உயர்ந்த பண்பையும் சுவாமிகள் கொண்டு இருந்தார்கள். இவ்வாறு "போதும்" என்ற வார்த்தை இதய சுத்தியுடன் வரக்கூடிய அன்னதானத் தொண்டை 1985 ஆம் ஆண்டு சுவாமிகள் இறைவனடி சேரும் வரை சிறப்பாக மேற்கொண்டு இருந்தார்கள்.

மயில்வாகன சுவாமிகள் விட்டுச் சென்ற தொண்டை இன்று சுவாமிகளின் அன்பிற்கும் அருளிற்கும் பாத்திரமான திரு. மோகனதாஸ் அவர்கள் "சந்நிதியான் ஆச்சிரமம்" என்ற பெயரில் இயங்கும் ஸ்தாபனத்தின் மூலம் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார்கள். மயில்வாகன சுவாமிகள் செய்த தொண்டைத் தொடருவதே தான்குருவுக்குச் செய்யும் காணிக்கை என்னும் இலட்சியத்துடன் திரு. மோகனதாஸ் அவர்கள் செயற்படுவதைக் காணமுடிகின்றது. சந்நிதியான் ஆச்சிரமம் அன்னதானப் பணியுடன் மட்டும் நின்று விடாது திருவாசக முற்றோதல்; வாராந்த வெள்ளி நிகழ்வை நடாத்துதல், கலைபண்பாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற கைங்கரியங்களில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் 1993 ஆம் ஆண்டிலிருந்து மயில்வாகன சுவாமிகளின் குருபூசைத்தினம் தொடர்பாக மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, குறட்பா அறிவுப்போட்டி என்பனவற்றையும் நடாத்தி வருகின்றது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற மாணவர்களுக்கு சான்றிதழ், பரிசில்கள், பணம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

நாளை 09 - 08 - 97 சனிக்கிழமை ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கும் குருபூசையில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அனைத்து அன்புள்ளங்களையும் அழைக்கின்றோம்.

ந. அரியரத்தினம். B. Ed.



மயில்வாகனம் சுவாமிகள்

### குருபூசை நிகழ்ச்சி நிரல்

**தலைவர்:- நல்லை ஆதீன முதல்வர்**

சிறப்புரை வழங்குவோர்:

★ சுவாமி சித்ருபானந்தா அவர்கள்
★ வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள்
★ திரு. சி. முருகேசப்பிள்ளை அவர்கள்
★ திரு. நா. மகேந்திரம் அவர்கள்
★ திரு. S. சிவலிங்கராசா அவர்கள்
★ திரு. செ. ஸ்ரீ நிவாசன் அவர்கள்

வெற்றியீட்டிய மாணவர்களின் நிகழ்வுகளும், பரிசளிப்பும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 28 — 06 — 1933



மறைவு: 09 — 07 — 1997

### நல்லதம்பி முத்துத்தம்பி

(முன்னைநாள் யாழ்; கிருஸ்ணபவான் உரிமையாளர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை எல்லாம் நல்ல பாதையில் வழி நடத்தி நல்லநிலையில் விட்டு இடைநடுவில் எம்மை விட்டுப் பிரிந்தீர்களே ஐயா! உங்கள் பிரிவால் மீளாத் துயரில் மூழ்கின்றோம். உங்கள் ஆத்மா என்றென்றும் எல்லாம் வல்ல இறைவன்திருவடியில் சாந்திஅடையப்பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் ஐயாவின் இறுதிக் கிரியைகளில் அல்லும், பகலும் பாடுபட்ட உற்றார், உறவினர் அயலவர்களுக்கும், உரிய நேரத்தில் உதவி புரிந்த செஞ்சிலுவைச் சங்க உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

08 - 08 - 97 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். ஐயாவின் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

ஐயாவின் ஆத்மா சாந்தி அடைவதாக.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்.

காளி கோயிலடி,
கோண்டாவில் மேற்கு.

(47361)

### சீநோர் ஊழியர் கலந்துரையாடல்

குருநகர், ஓக. 8

குருநகர் சீநோர் தொழிற்சாலையில் பணிபுரிந்து பின்னர் அத்தொழிற்சாலை இயங்காத காரணத்தால் வேலையிழந்துள்ள ஊழியர்களின் கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10- 00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலையிழந்துள்ள அனைத்து ஊழியர்களையும் தவறாது இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ-51)

### ஏழாலை மேற்கு விசேட அ. அட்டைகள்

யாழ்ப்பாணம், ஓக. 8

ஏழாலை தென்மேற்கு (ஜே—202) பிரிவில் விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களை எதிர்வரும் திங்களன்று காலை 8 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் இராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு இப்பகுதி கிராம உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

(ஐ)


ஓம் வேல் முருகா சரணம்!

வாடிக்கையாளர். நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் முருகன் அருள் பெற்று உயர்வடைய நல்லூரிக் கந்தனைப் பிரார்த்திக்கும்,

**புதிய கல்யாணி நகை அகம்**

87, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோயில் முன்பாக)

(48872)


## JOHNNIAN SPORTS CLUB

### ANNOUNCEMENT

The Jaffna Johnnian Sports Club will meet on **Monday 18th August 1997 at 4. 00 p. m.** in the College staff room to convene the **5th Annual General Meeting** and to revive the sporting activities of the club. Kindly note that no individual intimations would be sent, due to loss of records.

Please be present.

S. Thanapalan (Patron) — T. Shanmugathasan (Secretary)

(48856)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

1997 ஆம் ஆண்டு முதல் க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான மாதிரி வினா விடைத் தொகுப்பு எல்லாப் பாடங்களுக்கும் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி/1234]

### தவறிவிட்டது

சரோஜினிதேவி கனகராஜா என்பவரது 435401988V கொண்ட குடியிருப்பு, முள்ளைத்தீவு எனும் விலாசம் உடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். 28/6, மணல்தறை ஒழுங்கை, யாழ்ப்பாணம். [48850]

மார்க்கண்டு ரவீந்திரதாசன் என்பவரது 650782488V கொண்ட தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை சண்டிலிப்பாய்க்கும், மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்; சங்கானை, M. P. C S. [48859]

### திருமணசேவை

எம்மிடம் இந்து, கிறிஸ்தவ மணமக்களின் குறிப்புகள் உள்ளன. வீடு, காணி வாங்க விற்கவும் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்ளவும். G திருவிளங்கம், R. லூர்து மேரி மாங்கல்ய ர் மல்ரி சேவிஸ், 40/5, ரெம்பிஸ் றோட்லேன் (ரெயில்வே கடவைக்கு சமீபமாக). [48842]

### புலமைப் பரிசில் 97

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேடபயிற்சி வினாத்தாள்கள், விடைகளுடன் எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியீடு: Bond. 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (48844)

### விண்ணப்பப் படிவம்

மாகாண அரசாங்க சேவையில் எழுதுநர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், தொழில் நுட்பவியல் சேவை, பட வரைஞர் பதவிக்கான படிவம் விற்பனையாகிறது. தபாலில் பெறுவதாயின் ரூபா 7/50 சதம் அனுப்பவும். விலாசம் நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய் (48846)


## இந்து நாகரிகம்
## 98 AL

**1 வருடத்துக்கான வகுப்பு**

முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்

**வாரத்தில் 4 மணித்தியால வகுப்பு**

ஆரம்பம்: **09-08-97**
சனி 10-00 மணி

**ஆசிரியர்:**
**திரு. ஜோதீஸ்வரன்**
B. A (Cey.)

அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்:

**COLLEGE OF COMMERCE**
**நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**
(48837)



**யாழ். மக்கள் அனைவரும் நல்லூர் கந்தனின் திருவருளைப் பெறுவார்களாக!**

நல்லூர் திருவிழா காலத்தில் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாடுங்கள்:

**TASTY (ரேஸ்ரி)**

எமது பொருள்கள் யாழ். குடா நாட்டில் எங்கும் கிடைக்கும்.

★ நெல்லிரசம்
★ கோடியல் வகைகள் Orange, (Pine apple Lime& Mixed Fruit)
★ ஜாம் வகைகள் (Wood apple, Pine apple, MixedFruit & Strawberry)
★ எலுமிச்சம் பழ ஊறுகாய்
★ சோஸ் (Sauce) வகைகள் (Chillie & Tomato)

இவைகளைச் சுவைத்து இன்பம் அடைவீர்கள்

**"ரேஸ்ரி" - சுவையின் மகாராஜன்**

திருகு மூடியுடன் உள்ள வெற்று ஜாம் போத்தல்களை எம்மிடம் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**ரேஸ்ட்லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட்**

ஆடியபாதம் வீதி,
(கேணியடி வைரவர் கோயில் அருகில்)
திருநெல்வேலி. (48825)


## 6 ஆம் மாத நினைவலைகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 13 — 05 — 1942 | 13 — 03 — 1997 |

அமரர்
### டேவிற் சுப்ரமணியம் கிருபாகரன்

அன்பின் திருவுருவே!
பாசத்தின் ஒளி விளக்கே!
எம்மையெல்லாம் பூமியிலே
பேரோடும் புகழோடும்
வாழவைக்க வேண்டும் என்று
அரும்பாடு பட்டீர்கள்;
புகழாரம் தந்தீர்கள்.
உங்கள் அன்பு மனையாளை
பாசத்தின் நல்லாளை
கண்ணீரில் வாழ விட்டு
கணப் பொழுதில் நீங்கள்
மறைந்து விட்ட மாயம் தான் யாமறியோம்!
கடைக்குட்டி உங்கள் செல்ல
மகன் இங்கே செய்வதறியாது
திகைத்துத் தான் நிற்கின்றான்.
அக்கரையில் வாழும் நீங்கள் பெற்ற
செல்வங்கள் தாம் அம்மாவும், அப்பாவும்
அன்றில் பறவைகளாய் தங்களிடம் வருகின்ற
அழகுக் காட்சியைத்தான் காணவேண்டுமென்று
வேண்டினரே தெய்வங்களை.
பண்புடனே நீங்கள் தேடிய
மருமக்களும் உங்கள் நல்வரவுக்காய்
எண்ணித்தான் காத்தனரே!
ஆசையுடன் உங்கள் மக்கள்
பெற்ற முத்துக்களும் அப்பப்பா
வருவாராம் கதைகள் பல சொல்வாராம்
கட்டித்தான் நாங்கள்
முத்தங்கள் கொடுத்திடுவோம்.
என்றெண்ணி நாங்கள்
மகிழ்ந்திருந்த வேளையிலே
காலனவன் உங்கள் பொன்னுயிரை
கணப்பொழுதில் பறித்துவிட்டான்.
என் செய்வோம் அப்பா!
ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
ஆறு மாதம் என்ன எங்கள்
உயிர் உள்ளவரை
உங்களையே நினைத்திருப்போம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்:
அன்பு மனைவி லீலா,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

குமரகோட்டம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (48674)


# WANTED

**A Medical Doctor to work For "Medecins sans Frontieres" Doctors without Borders in Madhu.**

This Doctor will see patients in the OPD, Be on call for emergencies and carry out General Hospital duties. Please contact:

**MSF in Jaffna for Further Information On C. L. S. Bookshop Lane.**
(48810)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 08 — 08 — 1935 | 09 — 07 — 1997 |

### திருமதி செல்லையா புவனேஸ்வரி

அன்னையே! எம்மை இந்த அவனியில் வாழவென்று
அன்பொடு பெற்று வளர்த்தாய் அம்மா!
உன்னையே நாங்கள் இனி உலகினிற்
காண்பதெப்போ?
அன்னையே! எமக்கு இங்கு ஆறுதல் சொல்வார்
யாரோ?

- குடும்பத்தினர்

கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (48860)

ஸ்ரீ பவனம், பலாலி.

## கண்ணீர் நினைவுகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 — 05 — 1935 | 08 — 07 — 1997 |

திருமதி
### பார்வதியம்மா பாலசுப்பிரமணியன்

அம்மா! உள்ளே சுமந்தாய்! உருவாக்கினாய்!
உயர வழிகாட்டினாய்!
உயர்வு கண்டு உளம் மிக மகிழ்ந்தாய்!
தூய உள்ளத்தால் அன்புடன் அரவணைத்தாய்...
நாம் வாழ வழிகாட்டி ஆசீர்வதித்தாய்...
வஞ்சகர் உலகிலே வாழ்ந்தது போதுமென்றா
தஞ்சமென்றிருந்த எமைத் தவிக்கவிட்டு
ஓடிவிட்டாய்?
அம்மா! நீ பேசிய வார்த்தைகள்
நீ சிரித்து மகிழ்ந்த நாள்கள்
உன்னோடு பகிர்ந்திட்ட இன்பதுன்பங்கள்
நினைக்கையிலே நெஞ்சம் வெடிக்கிறதே!
அம்மா! உனக்கு மட்டுந்தான் புரியும்...
என் நெஞ்சின் ஏக்கங்கள்!
ஆண்டவன் அரவணைப்பில் அம்மா...
நீ அமைதியாய் உறங்கு

கடந்த 08-07-97 அன்று காலமான எமது தாயாரின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்த யா/ மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம், யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திருமதி வித்யா மகேந்திரன்,
சிவன் கோயிலடி,
சாவகச்சேரி. (கி/1276)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

## நம்பிக்கைத் துரோகம்

இலங்கையில் தீராப் பிரச்சினையாக இருந்து வருவது இன விவகாரம். அதற்குத் தீர்வு கிடைக்கும் என்று நம்புவதற்கான ஆக்க பூர்வமான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

அது போலவே, யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் மீளக் குடியேறிய பின்னர் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் விடயமும் தீர்வில்லாது, முடிவில்லாது இழுபட்டுச் செல்கிறது; இழுத்தடிக்கப்படுகிறது.

வடக்கில் கைதாகி காணாமற் போனவர்கள் குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புமாறு வடபகுதியில் கைதானோரின் பாதுகாவலர் சங்கம் தமிழ், முஸ்லிம் எம்.பிக்களை கேட்கும் அளவிலேயே இது விடயம் வந்து நிற்கிறது.

கைது செய்யப்பட்டவர்கள் அல்லது படையினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது கூட இதுவரை தெரியாது சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள்—பாதுகாவலர்கள்—நாளாந்தம் செத்துக் கொண்டிருக்கிறார்கள்!

காணாமற் போன தமது பிள்ளைகளுடன், கணவன்மாருடன், சகோதர, சகோதரிகளுடன் கடிதத்தொடர்பு கொள்ளக்கூட இயலாத இருண்ட நாள்களைக் கழித்து உடலும் உள்ளமும் சோர்ந்து போயுள்ளார்கள்.

தமது உறவுகள் - உயிரின் பந்தங்கள் — வாழ்வின் அங்கங்கள்—எங்கிருக்கிறார்கள்; ஏது ஆனார்கள் என்பதனை அறிய முடியாமல் கடந்த பதினைந்து மாதங்களாக அலைந்தும், உலைந்தும் அல்லற்படும் பாதுகாவலர்களின் பிரதிநிதிகள் கொழும்புக்கும் சென்று ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று பார்த்தார்கள், அங்குள்ள மனித உரிமை இயக்கங்கள், மற்றும் பலரைச் சந்தித்தார்கள்.

ஜனாதிபதியைச் சந்தித்து தமது வேதனையை வெளியிட முயற்சித்தார்கள்; மனித நேயத்துடன் தமக்கு உதவுமாறு இரந்து கேட்க விரும்பினார்கள். இயலவில்லை. சந்திப்புக்கு இரண்டு திகதிகள் ஒதுக்கப்பட்டன. பின்னர் சந்திப்பே ரத்து செய்யப்பட்டுவிட்டது.

குடாநாட்டில் கைதாகி காணாமற்போனோர் விடயத்தை நாடாளுமன்றத்தில் எம். பிக்கள் ஒரேவேளையில் ஒரே குரலில் ஒலித்தால், அரசுத் தரப்பு அதற்குப் பதிலளிக்குமா என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு இரண்டு தடவைகள் பலாலி வந்து கைதாகி காணாமற்போனவர்களின் உறவினர்களின் முறைப்பாடுகளை, நேரில் கண்டவர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்து போனது. ஆனால் பாதுகாவலர்களின் பரிதவிப்புக்கு நிவாரணம் இல்லை.

இது விடயத்தில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன; நீதி மறுக்கப்படுகிறது என்பதனைச் சற்றும் மனதிற் கொள்ளாமல், தன்னை நம்பி மீளக்குடியமர்ந்த மக்களுக்குத் துரோகம் செய்வதனை உணராமல், அரசு மாற்றாந்தாய் மனதுடன், மனித நேயமின்றி நடந்து கொள்வது நல்ல விளைவுகளைத் தரமாட்டாது.

யாழ். செல்வதற்காகத் திருமலையில் தங்கியுள்ள

# ஊழியர், மாணவரை "தராகி"யில் அனுப்பும் முயற்சி கைகூடவில்லை

திருகோணமலை, ஓக. 8

திருகோணமலையில் தரித்து நிற்கும் 'தராகி' கப்பல் இன்று மன்னார் நோக்கி புறப்படும் போது யாழ். செல்லவுள்ள அரச ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோரை அதில் அனுப்ப எடுத்த முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் தங்கியுள்ள அகதிகளைக் காங்கேசன் துறைக்கு அழைத்துவர 'தராகி' கப்பலை உடனடியாக மன்னாருக்கு அனுப்புமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திருகோணமலை பிரதேச செயலகத்தைப் பணித்துள்ள போதிலும் இக்கப்பல் 40 கடல் மைல் தூரத்தில் செல்லத் தகுதியானது அல்ல என்று துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

20 கடல் மைல் தூரத்திலேயே இக்கப்பல் போக முடியும் என்பதால் பயணிகளை ஏற்றிச்செல்லக் கடற்படையினர் அனுமதி மறுத்து விட்டனர்.

இதன் காரணமாக பயணிகள் எவரையும் ஏற்றாமல் வெறுமனே அக்கப்பல் இன்று மன்னார் நோக்கிப் புறப்பட இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-150)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

# அல்லல் தீர்க்கும் நல்லைக் கந்தன் மஹோற்சவம் இன்று ஆரம்பம்

அல்லல் தீர்க்கும் நல்லைக் கந்தனை அனுதினமும்
அல்லும் பகலும் நினைந்து நினைந்து அகமுருகி
செல்வா குமரா செவ்வேள் முருகா என இறைஞ்ச
பொல்லா வினைகள் போயகன்று பொடிபடுமே.

வண்ண மயில் மீதில் வள்ளி தெய்வானை சமேதராய் வடிவேலுடன் விளங்கும் கண்ணிறைந்த கடவுளான கந்தப் பெருமானுக்கு, புண்ணியப் பதியான நல்லையில் பண்ணிசை முழங்க பக்தர் குழாம் சூழ ஆண்டு மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

இருபத்தைந்து தினங்கள் நடைபெறும் இத்திருவிழாவில் திரு நல்லை பெருவிருந்தளிப்பதாய் இந்திர லோகம் போல் காட்சியளிக்கும் முருகனது எழில் காட்சி எம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் கள்ளமிலா அன்புடன் உள்ளம் உருக பள்ளம் நோக்கிப் பாயும் வெள்ளம் போல, பக்தர் குழாம் நாலா பக்கமும் இருந்து நல்லையை நாடி வருவதற்கு நல்லைக் குமரனின் கவர்ச்சியே மூலகாரணம். அவன் அழகன் இளைஞன் அருளாற்றல் மிக்கவன். ஆதரவற்றவர்களுக்கு அபயம் அளிப்பவன். அறிவு மீறுவோரை சித்தம் தெளிய வைத்து பத்திமிக்க தொண்டராய் உவப்புடன் ஏற்பவன் இதனால் பக்தர் கூட்டம் அலை மோதும்.

கந்தன் காந்தக் கடவுள். அவன் குறவள்ளிக் காந்தன். அடியவரைக் கவர்ந்திழுப்பதில் வல்லவன். கந்தனைச் சிந்தனை செய்து வந்தனை புரிந்தால் அவன் பந்தமுடன் அரவணைத்துப் பல நலன் அருள்வான். முருகா —என்று ஒரு தரம் ஓதி உருகி நின்றால் கூட அவன்நற்கதி தருவான். மாறுபாடுற்றவரால் எமக்கு ஊறுகள் ஏற்படும் போதும், வேறு துணையின்றி வேதனையுற்றுழலும் போதும் அவன் தேறுதல் அளிப்பவன். அவன் வீறு பெற்றெழுந்தால் சூரன் கூறு இரண்டாகிப் பேறுபெற்றுய்ந்தான். மயில் மீது அமரும் அயில் வேலனின் நாமம் தினம்பயில்வோமாயின் மயல் நீங்கி இயல்பு வாழ்வில் இன்புற்றிருக்கலாம்.

முருகன் ஆறுமுகன் சிவமூர்த்தியே ஐந்து முகங்களோடு அதோ முகமும் உடையராய் ஆறுமுகப் பெருமான் ஆயினர். சிவபெருமானுடைய சுத்த குணங்களாகிய முற்றறிவு, வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றல் உடைமை, தம்வயமுடைமை ஆகிய ஆறும் கந்தப் பெருமானின் கருணை பொழியும் முகங்களாக விளங்குகின்றன. அவன் ஆறுபடை வீட்டின் அதிபன்.

சோதிப் பிளம்பான முருகக் கடவுள் ஆதி பரம்பொருளேயன்றி வேறில்லை. 'சிவனே அவன் ஆடலால் மதலையாயினன்' என்பதால் இதை உணரலாம். ஆறுமுகத்தில் அடங்கியிருக்கும் குழந்தைமை, முதிர்ந்த ஞானம், அருளாற்றல், வீரம், கண்ணோட்டம், கனிவு இவ்வாறு உணர்த்தப்பட்டுள்ளன.

ஏறு மயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆன பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே!

- வாசுகி சிவராமலிங்கம்

## கொடியேற்றிக் குறை நீக்குவாய்

கொடியேற்றிக் குறையெல்லாம் நிறைவாக்குவாய்
— நல்லூர்க்
குமரரயே எம் உள்ளத்தில் குடியேறுவாய் — (கொடி)
— தொடுப்பு —
வடிவேலும் இருமாதர் புடைசூழவே — சேவல்
வனப்பான கொடியோடு மயிலேறியே — (கொடி)
— முடிப்பு —
அமிழ்தான தமிழாலே அர்ச்சித்துமே — உன்னை
அகலாது கவிபாட அருளூட்டுவாய்
தமிழோசை கேட்டெங்கள் தமிழ் வாழவே — முருகா
தயவாய் நீ வருவாய் எம் தமிழ்த் தெய்வமே —(கொடி)
ஒளவைக்குத் தமிழ் தந்து புகழ்கொண்டவா —அப்பன்
அருட் காதில் 'ஓம்' என்று உபதேசித்தவா
உய்வுற்று நாம் வாழ அருள் கொண்டுவா — எங்கள்
உறவே நீ '[illegible]' [illegible]
- [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதானோர் பாதுகாவலர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 8

வடபகுதி கைதானோர் பாதுகாவலர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கப்பணிமனையில் நடைபெறவுள்ளது. நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

## தபால் ஊழியர் சங்கங்கள் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தும்

கொழும்பு, ஓக. 8

தபால் திணைக்களத்தைப் புனரமைப்பது என்ற போர்வையில் அதனைத் தனியார் மயப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் —

ஊழியர்களின் தொழில் உத்தரவாதத்தை இழக்கும் அச்சுறுத்தல் குறித்தும் — தபால் திணைக்கள ஊழியர்களுக்கு எடுத்துரைக்கும் கூட்டங்களை தென்பகுதியில் நடத்துவதற்கு தபால் ஊழியர்கள் சங்கங்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றன. (இ-10)

## துப்பாக்கி சூட்டில் மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 8

மண்டைதீவு, அல்லைப்பிட்டி கடற் பிராந்தியத்தில் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்தார்.

சாட்டிக் கடல் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வேலணையைச் சேர்ந்த பழனித்துரை கருணாகரன் (வயது-30) என்பவரே காயமடைந்தவராவார்.

இவருடன் கூடச் சென்றவர் கடலில் பாய்ந்து காயமின்றித் தப்பிக்கொண்டார்.

காயமடைந்தவர் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-15)

## விறகு கொத்த மிதி வெடி வெடித்தது

யாழ்ப்பாணம், ஓக. 8

விறகு கொத்திய வேளை விறகின் கீழிருந்து வெடித்த மிதிவெடியால் ஒருவர் காயமடைந்தார்.

இருபாலையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து இருபாலையில் வசிக்கும் தேவராசா நந்தீஸ்வரன் (வயது 20) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கோப்பாய் உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 8

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை 16 ஆம் தொடர் இலக்க உலர் உணவு முத்திரைகள் விநியோகிக்கப்படவுள்ளன. அன்றைய தினம் முத்திரைகள் எடுக்கத் தவறுவோரின் முத்திரைகள் மீள் பரிசீலனை செய்யப்படும் என்று கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

## நாளை

**ஆடி 24**
சனிக்கிழமை
திதி: ஷஷ்டி
பின்னிரவு 12.50 வரை.
நட்சத்திரம்: சித்திரை
பின்னிரவு 3.57 வரை.
ஷஷ்டி விரதம்
சுபநேரம்: 3.04 - 4.34
ராகுகாலம்: 9.04 -10.34
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## சமய சந்நிதிகளில்

நவாலி அருள்மிகு அத்திரான் முருகமூர்த்தி கோயில் மஹா கும்பாபிஷேக மண்டல மஞ்சன பூர்த்தி தின பஞ்சகுண்ட நவோத்திர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் இன்று காலை 7 மணி முதல் நடைபெறும். (ஐ-100)

★ ★ ★

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெற்று வந்த மஹோற்சவத்துக்குப் பதிலாக இம்முறை அலங்காரத் திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள்விழா நடைபெறும்.

கடந்த ஏழு வருடங்களாக மேற்படி ஆலயத்தில் நித்திய பூசைகளை நடத்த முடியாத சூழ்நிலை இருந்தது கடந்த மாதம் 8 ஆம் திகதி முதல் மீண்டும் அங்கு பூசைகள் ஆரம்பிக்கப்பட்டன. (ஐ-5)

## பயிற்சிக் கருத்தரங்கு

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றை இம் மாதம் 25 ஆம் திகதி நடத்த உள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் பெயர், கல்வித்தகமை, கற்பிக்கும் அறநெறிப் பாடசாலையின் பெயர் என்பவற்றை அறநெறிப் பாடசாலை அதிபர் ஊடாக யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (இ-100)

## போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஓக. 8

மாகாண அரசாங்க சேவையின் எழுதுநர் சார்ந்த சேவைகளுக்கும், தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர் சேவைகளுக்கும் ஆள்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்

## வருடாந்த பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும்

மன்றத்தின் 44 ஆவது வருட ஒன்று கூடலும் பொதுக் கூட்டமும் 1997-09-07 ஞாயிறு கல்லூரியில் நடைபெறும். அங்கத்துவத்தை புதுப்பிப்போரும், புதிதாக சேர விரும்புவோரும் உப செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

1) பிரேரணைகள் இருப்பின் 1997-08-15 க்கு முன்னர் உப செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

2) பழைய மாணவர் மன்றத்துடன் இதுவரை தொடர்பில்லாத பழைய மாணவரும், மற்றைய ஆயுட்கால சாதாரண அங்கத்தவர் அனைவரும் தங்கள் தற்போதைய முகவரிகளை தந்துதவவும்.

K. V. ஜெயலிங்கநாதன்
வைத்தீஸ்வராக் கல்லூரி, உபசெயலாளர்-
யாழ்ப்பாணம்.
1997-08-06 (48867)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமலிங்கம் நேசம்மா

(காரைக்கால், இணுவில் கிழக்கு)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த இராமலிங்கத்தின் அன்பு மனைவி நேசம்மா 07-08-1997 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கண்முகநாதன், காலஞ் சென்றவர்களான கயிலாயநாதன், இலங்கநாதன் மற்றும் கலாவதி, பாலசுப்பிரமணியம், பிரசாபதி (குஞ்சுமணி, சுவிஸ்), யோகேஸ்வரி (பிள்ளை, சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சகுந்தலாதேவி, கந்தசுவாமி (பெஷன் ஹவுஸ்), மல்லிகாதேவி, மகாலக்சுமி (சுவிஸ்), தயாபரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்சினி, நிரஞ்சினி, பிரதீபன், கார்த்தீபன், கிருஸ்ணகுமாரி, அபிராமி, றம்யா, கௌரிசங்கர், பார்த்தீபன் (ஹெலன்ட்), பரந்தாமன், எழிலரசி, வாமலோஜனன் (கொழும்பு), பாலகிரீசன், வைஷ்ணவன், வைஷ்ணவி, கோபிகிருஷ்ணா, மயூர்ராஜ் (சுவிஸ்), தர்ஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 8-08-1997 இன்று வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
த. கந்தசுவாமி (மருமகன்)
(பெஷன் ஹவுஸ் 65, K K.S வீதி,
யாழ்ப்பாணம்)
இணுவில் கிழக்கு,
காரைக்கால் சிவன் கோயிலடி. (48868)

## பொன்னம்பலம் பாலசுந்தரம்

(பாலா, ராசன்)

(இளைப்பாறிய இலங்கைக் காப்புறுதிக் கூட்டுஸ்தாபன உத்தியோகஸ்தர்)

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டு தற்சமயம் வெள்ளவத்தையில் வசித்தவருமான பொன்னம்பலம் பாலசுந்தரம் 2-8-97-ல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், புனிதவதியின் ஆருயிர்க் கணவனும், காலஞ் சென்ற வைத்தியநாதன்-பொன்னம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் பிரேம்ராஜ் (Swiss), சாந்தராஜ் (Canada), பிரேமலதா (Canada), மஞ்சுளா, தன்ராஜ் (ராஜி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயவதனி (Swiss), சுகந்தி (Canada), ஜெயசெல்வன் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும். பார்த்தீபன் (Swiss), காண்டீபன், (Swiss) ஆகியோரின் அப்பப்பாவும், ஆதர்ஷா (Canada) வின் தாத்தாவும். தளையசிங்கம் (Canada), காலஞ்சென்ற அரியநாயகம், ராஜலட்சுமி, காலஞ்சென்ற பாலசரஸ்வதி, சரோஜாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (9-8-97) சனிக்கிழமை காலை முதல் 181/5, W. A. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (10 - 8 - 97) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
திருமதி பு. பாலசுந்தரம்
(மனைவி)
181/5, W. A. சில்வா
மாவத்தை, வெள்ளவத்தை.
தொலைபேசி இல-: 594486 (C/1282)

## 5 ஆம் ஆண்டு பரீட்சை

ஐந்தாம் ஆண்டுப்புலமைப் பரிசில் பரீட்சைக்கு யாழ். மாவட்டம் தவிர்ந்த வேறு மாவட்டப் பாடசாலைகள் மூலம் விண்ணப்பித்து தற்சமயம் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் பெயர் விவரங்களை வலயப் பணிமனைகளில் சமர்பித்தவர்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் இரட்டைப் பிரதியில் விவரங்களைச் சமர்பித்து கட்டெண்களைப் பெற்று மாணவர்களுக்கு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## தப்பியோடிய...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்து இராணுவத்தில் இணைவதற்கு வழங்கப்பட்டிருந்த காலக்கெடு கடந்த 26 ஆம் திகதி முடிவடைந்த பின்னர் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் என்று பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

இதற்கிடையில் — இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய படையினர் எந்த சந்தர்ப்பத்திலும் மீண்டும் வந்து இராணுவத்தில் சேர்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும்—

இவர்கள் முன் அனுமதியின்றி கடமைகளுக்கு சமூகமளிக்காதவர்களாகக் கருதப்படுவர் என்றும்—

இவர்களுக்கு சிறிய தண்டனைகள் மட்டும் வழங்கப்படும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

உற்சவ காலங்களில் பக்தர்கள் வசந்த மண்டபப் பூஜையைக் கண்டுகளிக்க வசதியாக தெற்கு வாசல் நேற்று மாலை 4 50க்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட இந்த வாசல் வழியாக வாஸ்து சாந்தி இடம் பெற்றது. (இ-3-103)

## புளியங்குளத்துக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)

ரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் ஓமந்தையில் இருந்து முன்னேறிய 55 ஆவது படையணி மதியாமடு ஊடாகச் சென்றும் —

நெடுங்கேணியில் இருந்து முன்னேறிய 53 ஆவது படையணி நயினாமடு பின்னசம் மனங்குளம், சின்னபூவரசங்குளம் ஊடாகச் சென்றும்— இணைந்து கொண்டதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. [இ-164-3)

## 5 படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

மையகம் அறிவித்தது.

மன்னார் நொச்சிக்குளத்தில் நேற்று அதிகாலை 2.05 க்குதாம் மேற்கொண்ட தாக்குதலில் 4 காவலரண்களைக் கைப்பற்றி அழித்ததாகவும் —

3 படையினர் உயிரிழந்ததாகவும் —

4 படையினர் காயமடைந்ததாகவும் — "புலிகளின் குரல்" வானொலி தெரிவித்தது.

60 எம், எம். மோட்டார் மற்றும் ஷெல்களை கைப்பற்றியதாகவும் —

தமது தரப்பில் 4 பேர் களப்பலியானதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் இத்தாக்குதல் காரணமாக மன்னாருக்கான உயிலங்குளம் பாதைப் போக்குவரத்து தடைப்பட்டது.

மன்னார் அரச அதிபர் குறூஸ் எடுத்த நடவடிக்கையின் பயனாக போக்குவரத்து [illegible] (இ-3-164)

# முல்லைத்தீவில் கிபிர் விமானங்கள் நான்காவது நாளாக குண்டுவீச்சு

வவுனியா, ஓக. 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 ஆவது நாளாக நேற்றும் கிபிர் விமானத் தாக்குதல் இடம்பெற்றது.

அதே நேரம் — நெடுங்கேணி, கிளிநொச்சி முகாம்களில் இருந்து குடியிருப்புக்களை நோக்கி நேற்று காலை முதல் இரவுவரை ஷெல் தாக்குதல் தொடர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் மக்கள் இரவோடிரவாக இடம்பெயர்ந்தனர்.

(இ-3-164)

## விபத்துக்களில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஓக 8

நேற்று இடம்பெற்ற இரண்டு வீதி விபத்துக்களில் இருவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரும், ஆனைப்பந்தி தனியார் மருத்துவமனை வைத்தியருமான கோப்பாயைச் சேர்ந்த டாக்டர் செல்லப்பா இராசேந்திரன் (வயது 70) காயமடைந்தார்.

சுழிபுரம் பிரதான வீதியில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த தவராசா வெங்கடேஸ்வரன் (வயது 5) என்ற சிறுவன் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (இ-15)

## இலங்கை அணி வீரர்களுக்கு காணி!

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வீரர்கள் பல சாதனைகள் படைத்ததையடுத்து இலங்கை அணியில் இடம் பெற்ற வீரர்கள் அனைவருக்கும் பொருத்தமான காணிகளை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

## புலிகளுடன் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆனால் அதில் வெற்றி காண்பதாகத் தெரியவில்லை.

கிளிநொச்சி வரையான 76 கிலோமீற்றர் தூரத்தில் 24 கிலோமீற்றர் வரையிலேயே இராணுவம் சென்றடைந்துள்ளது.

750 க்கும் அதிகமான பாதுகாப்புப் படையினர் இந்த நடவடிக்கைகளில் பலியாகியுள்ளனர்; 300 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இன்னும் 3 வருடங்களில் இந்த ஆட்சி முடிந்துவிடும். அதுவரை இந்த யுத்தத்தை முன்கொண்டுசெல்லும் நிலை உள்ளது என்றார்.

களுத்துறை மாவட்ட ஐ. தே. க. எம். பி. திலக் கருணாரத்தின பேசுகையில் "1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இந்த சபையில் உரையாற்றும்போது இன்னும் ஒரு சில மாதத்தில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படும் என்று கூறினார். அது இன்று வரை நிறைவேற்றப்பட்டதா? புலிகளை அழித்து விட்டீர்களா? யுத்தத்தில் முன்னேற்றம் கண்டு விட்டீர்களா?

யாழ்ப்பாணத்தை மீட்டு விட்டோம் என்கிறீர்கள். இராணுவத்தை கொண்டு போய் அங்கு சிறைப்பிடித்து வைத்துள்ளதுதான் உண்மை என்றார்.

யாழ். மாவட்ட சுயேச்சைக் குழுப் பிரதிநிதி வி. சிவதாசன் பேசுகையில்—

"யாழ். பகுதிகளில் கைது செய்யப்பட்டுக் காணாமற் போயுள்ளவர்கள் எண்ணிக்கை 500க்கு மேல் ஆகும். பாதுகாப்புப் படையினரிடம் இருந்து இவர்கள் தொடர்பாக எதுவித தகவலும் இவர்களது பெற்றோர்களால்பெற முடியவில்லை" என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க பேசுகையில் அரசாங்கம் யுத்தத்தை தொடரப் போகிறதா? பேச்சுவார்த்தைகளை நடத்தப் போகிறதா? என்பதில் தெளிவற்ற தன்மை காணப்படுகிறது" என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு எம். பி. பி. செல்வராசா பேசுகையில் "புலிகளுடன் பேசாமல் சமாதானம் ஏற்படப் போவதில்லை. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்" என்றார்.

வன்னி மாவட்ட புளொட் எம். பி. வை. பாலச்சந்திரன் பேசுகையில், "பேச்சுவார்த்தை இன்றிச் சமாதானம் ஏற்பட முடியாது. அந்த பேச்சுவார்த்தைகளில் புலிப் போராளிகளும் உள்ளடக்கப்பட வேண்டும். அதற்கு 3 ஆம் தரப்பு மத்தியஸ்தமும் அவசியமாகும்" என்றார்.

இ. தொ.கா. பிரதிநிதி ஏ. எம். டி. ராஜன் பேசுகையில் எட்டுத் தமிழ்க் கட்சிகளுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. போராளிகளுடன் பேச்சு நடத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்" என்றார்.

அம்பாறை மாவட்ட ஐ. தே. க. பிரதிநிதி சந்திரதாஸ கலப்பதி பேசுகையில்; இனப் பிரச்சினை பெரும் பிரச்சினையை எழுப்பியுள்ளது. நீங்காத வடுவாக நிலைத்து நிற்கிறது.

"யாழ்ப்பாணத்துக்கு கடல், தரை, வான் மார்க்கமாகப் போக முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது— என்றார்.

மாகாண சபைகள், உள்ளூராட்சி பிரதி அமைச்சர் பி. சுமதிபால பேசுகையில், "பேச்சுவார்த்தைகளைமேற்கொண்டு இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட ஐ. தே. க. எம். பி அலிசாகிர் மௌலானா பேசுகையில், "அன்று தமிழ்ப் போராளிகளாக இந்த அரசாங்கத்தால் கௌரவிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இன்று பயங்கரவாதிகளாகக் கணிக்கப்பட்டுள்ளார்கள். ஒருவருக்கு பயங்கரவாதியாக இருப்பவர் இன்னொருவருக்கு உண்மையான போராளியாக இருப்பார் என்பதை நாம் நிராகரித்து விடமுடியாது.

"விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தேவையான நடவடிக்கைகளை உடன் அரசு செய்ய வேண்டும். யுத்தத்தை நிறுத்தி பேச்சை ஆரம்பிக்க வேண்டும்-என்றார்.

பெருந்தோட்டத்துறை வீடமைப்பு, பொது வசதிகள் பிரதி அமைச்சர் பி. சந்திரசேகரன் பேசுகையில், புலிகளுடன் பேச வேண்டும் என்பதைப் பலரும் விரும்புகின்றனர். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு சமாதானத்தை பேண முன்வரவேண்டும் என்றார்.

துறைமுகங்கள் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் பேசுகையில், "போர் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல. விடுதலைப் புலிகளுக்கு எதிரானதாகும். பேச்சுவார்த்தை, போர் நிறுத்தங்களை மீறியவர்கள் புலிகளே அவர்கள் தான் மீண்டும் சமாதானப் பேச்சுக்கான சமிக்ஞையைக் காட்ட வேண்டும்" என்றார்.

[இ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 08-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org